**<u>அசல் வழக்கு எண்: 666/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 06th day of February 2026
வா.சா.1. சீனுவாசன், த/பெ. பாபு,

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முத்துமாரியம்மன் கோவில் பழம்பேட்டை, சேத்துப்பட்டு கோவிலின் பரம்பரை அறங்காவலர் என விளம்புகை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட கோவிலை எனது தந்தையின் தாத்தா சுப்புராய செட்டியார் கட்டினார். அவர் தான் கோவிலை கட்டினார் என்பதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 04.06.1945 ம் தேதி எனது தந்தையின் தாத்தா சுப்புராய செட்டியார் மேற்கண்ட கோவிலை பராமரிப்பது தொடர்பாக வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். வா.சா.ஆ 1 ல் சர்வே எண் 13/2 ல் 57 செண்டும், 41/2 ல் 53 செண்டும், 41/3 ல் 51 செண்டும், 41/1 ல் 10 செண்ட் கிணறு வகையறாவில் பொதுவில் 1/2 பாகமும் கட்டுப்பட்டுள்ளது. சுப்புராய செட்டியார் தான் கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தையும் மேற்கண்ட வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்துவிட்டார். நான் பொய் சொல்கிறேன் என்றும் உண்மையில் சுப்புராய செட்டியார் மொத்தம் சுமார் 4.5 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு அது தெரியவில்லை. மேற்கண்ட 4.5 ஏக்கர் நிலத்தில் தான் ஒரு பகுதி நிலங்களை வா.சா.ஆ.1 மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.1 அசல் பத்திரம் என்னிடம் வீட்டில் உள்ளது. அந்த ஆவணம் பல தலைமுறைகளாக செட்டில்மெண்ட் ஆன தேதி முதல் எங்கள் வசம் தான் உள்ளது. அந்த ஆவணத்தை கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை என்றால் நாங்கள் தான் கோவிலை நிர்வாகிக்கிறோம். 04.06.1945 ம் வருடம் சுப்புராய செட்டியார் கோவிலை நிர்வகிப்பதற்கு அவர்உட்பட 7 அறங்காவலர்களை நியமித்தார். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதப்பட்ட அன்றைய தேதியிலேயே அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். மேற்கண்ட டிரஸ்ட் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்தார்கள். அந்த பதிவு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் அவ்வாறு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் அதனால் தான் அந்த பதிவு ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. டிரஸ்ட் உருவாக்கப்படாததால் தான் அதற்குரிய வரவு செலவு ஆவணங்கள் மற்றும் தணிக்கை விவரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அவ்வாறு தணிக்கை ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்வதால் தான் மேற்கண்ட கணக்கு வழக்கு மற்றும் தணிக்கை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 03.11.2006 ம் தேதி 4 ம் பிரதிவாதி வாதி கோவில் நிர்வாகத்தை கையகப்படுத்தினார்கள். ஆனால் எங்கள் நிர்வாகத்தில் தான் கோவில் உள்ளது. 1996 ம் வருடமே 4 ம் பிரதிவாதி இந்து சமய அறநிலை துறை மூலம் தனிப்பட்ட நிர்வாகி நியமித்ததாக நான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி தாவா கோவிலை கையகப்படுத்தி நிர்வாகம் எடுத்ததை எதிர்த்து யார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனது தந்தை பாபு செட்டியார் 2007 ம் வருடம் தாக்கல் செய்தார். அந்த வழக்கு இணை ஆணையரிடம் விசாரணைக்கு நிலுவையில் இருந்த நிலையில் 01.06.2011 ம் தேதி எனது தந்தை காலமானார். அதன் பின்னர் நான் விசாரணையை நடத்தினேன். எனது தந்தைக்கு 3 பெண் வாரிசுகளும், எனது தாயும், நானும் வாரிசுகளாக இருந்தோம். அந்த மனுவில் நான் மட்டும் தான் தரப்பினராக சேர்ந்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட மனு விசாரணைக்கு பின்னர் இணை ஆணையர், விழுப்புரம் அவர்களால் 20.06.2018 ம் தேதி தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். மேற்கண்ட உத்தரவை எதிர்த்து நான் இந்து சமய அறநிலை துறை ஆணையரிடம் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். அவர் அந்த வழக்கை மீண்டும் இணை ஆணையர் விசாரணைக்கு உட்படுத்த 19.05.2020 ல் உத்தரவு போட்டார் என்றால் சரிதான். மேற்கண்ட உத்தரவின் படி நான் மீண்டும் இணை ஆணையர் விசாரணைக்கு சென்றேனா என்றால் அங்கு விசாரணை செய்து தீர்ப்பு ஆக மீண்டும் 12 வருடங்கள் ஆகும். சரியான தீர்ப்பு வராது என கருதி நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6 ஆகியவற்றை விஜயா ஸ்டுடியோவை சேர்ந்தவர்கள் எடுத்தார்கள். அதன் நெகட்டிவ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்திய சாட்சி சட்டத்தின் படி மேற்கண்ட வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ 6 ஆவணங்கள் தாக்கல் செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை என்பதால் அவை சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.22 ஆகியவை நகல்கள் என்பதால் அவையும் சாட்சியமாக நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. கடந்த 4 ஆண்டுகளாக இந்து சமய அறநிலை துறை தாவா கோவிலுக்கு

புனரமைப்பு செய்து கும்பாபிஷேகம் நடத்தி முடித்தார்கள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ள போது எங்கள் அனுமதியின்றி அவற்றை செய்தார்கள். 2008 ம் வருடம் தாவா கோவிலில் இந்து சமய அறநிலை துறையினர் ஆவண வைப்பு அறை கட்டினார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேகத்திற்கு அறநிலை துறையினர் சுமார் ரூ.25,00,000/- செலவு செய்தார்கள் என்றால் ரூ.19,50,000/- செலவு செய்தார்கள். வா.சா.ஆ.5, வா.சா.ஆ.15 முதல் வா.சா.ஆ.19 வரையிலானவை என்னால் கொடுக்கப்பட்ட நாளிதழ் விளம்பரங்கள் என்றால் சரிதான். மேற்கண்ட நிகழ்ச்சிகள் என் தலைமையில் நடந்தன. என்னால் கொடுக்கப்பட்ட விளம்பரங்கள் இந்த வழக்கிற்கு பின் கொடுக்கப்பட்டவை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு விழா எதுவும் நடக்கவில்லை என்றும் மேற்கண்ட ஆவணங்கள் வழக்கிற்காக எங்களால் உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ன் படி அரசால் நிலம் ரோட்டிற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா கோவில் சர்வே எண் 41/3 ல் 53 செண்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண் 41/3 ல் அரசு ரோட்டிற்காக எந்த நிலமும் கையகப்படுத்தவில்லை என்றால் சரிதான். சுப்புராய செட்டியாரால் உருவாக்கப்பட்ட டிரஸ்ட் தற்போதும் உயிர்ப்புடன் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகியவை என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்பதால் அது சாட்சியாக ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |